ஆசிரியர் – R.Prasanthan NDT, BEd (primary) **Director**

அலகு 8 நீர்

1. சூரிய ஒளியில் உள்ள நிறங்களை கண்டறிந்தவர்?
   1. ஐசக் நியூட்டன்
   2. தோமஸ் அல்வா எடிசன்
   3. மார்க்கோணி

2. நீரைச் சுத்திகரிக்கும் பண்டைய முறையாக அமையாதது?
   1. மணலின் ஊடாக வடித்தல்
   2. குளோரின் இடல்
   3. கொதிக்கவைத்து ஆறவிடல்

3. மிகவும் தூய்மையான நீர்?
   1. ஆற்றுநீர் 2. மழைநீர் 3. குளத்து நீர்

4. நீருடன் நன்றாக கலக்கக் கூடிய திரவம்?
   1. தேங்காய் எண்ணெய் 2. மண்ணெண்ணெய் 3. வினாகிரி

5. இரண்டு பனிக்கட்டிகளை ஒன்றுடன் ஒன்று சேர்த்து சிறிது நேரம் பிடித்துக் கொண்டால் நிகழ்வது?
   1. சூடாகும்
   2. ஒட்டிக் கொள்ளும்
   3. முழுமையாக கரைந்து விடும்

6. பிளாஸ்டிக் போத்தலை கொண்டு நீர் வடிகட்டியை தயாரிக்கும்போது போத்தலினுள் இடப்படும் மணற் படையின் மீது இட வேண்டிய பொருள் எது?
   1. பஞ்சுத்திரள் 2. களிமண் 3. பரல்படை

7. நீரை சுத்திகரிக்க உதவும் இரசாயன பொருள் எது?
   1. கொண்டிசு
   2. பனிக்கட்டி
   3. பொட்டாசிய தூள்

8. அருகே காட்டப்படும் படங்களில் நல்ல முட்டை கொண்ட பாத்திரம் அல்லது பாத்திரங்கள்?
   1. சாடி A
   2. சாடி B
   3. சாடி A , B



A B

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

LEARN EASY
KNOWLEDGE IS POWER

www.learneasy.lk || www.lkedu.lk

9. பின்வருவனவற்றில் விரைவாக ஆவியாகும் திரவம்?
   1. டீசல் 2. மண்ணெண்ணெய் 3. பெட்ரோல்

10. கடும் நிறங்களுடன் வெள்ளை நிறத்தை கலப்பதால் பெறப்படும் நிறம்?
   1. கடும் நிறமாக இருக்கும்
   2. இளம் நிறமாக இருக்கும்
   3. வெள்ளை நிறமாக இருக்கும்

11. பின்வருவனவற்றில் மூல வர்ணங்கள்?
   1. நீலம் மஞ்சள் சிவப்பு
   2. ஊதா மஞ்சள் பச்சை
   3. கறுப்பு மஞ்சள் சிவப்பு

12. அசுத்தமான நீரை பருகுவதால் ஏற்படும் நோய்?
   1. நெருப்புக்காய்ச்சல் 2. டெங்கு 3. மாலைக்கண்

13. மனிதன் சராசரியாக நாளொன்றுக்கு அருந்த வேண்டிய நீரின் அளவு?
   1. 1.5l 2. 2.5l 3. 3l

14. இப் பரிசோதனை செய்வதற்கு முக்கிய காரணமாக அமைவது ?



   1.நீரின் திண்ம நிலையை காட்டுவதற்காக
   2.நீரை பனிக்கட்டியாக மாற்றுவதற்காக
   3.நீரை வாயு நிலைக்கு மாற்றுவதற்காக

15. நீரின் வாயு நிலை எவ்வாறு அழைக்கப்படும் ?
   1. திரவம் 2. நீராவி 3. பனிக்கட்டி

16. மழைவீழ்ச்சியை அளக்கப் பயன்படும் அலகு எது?
   1. மில்லிலிட்டர் 2. மில்லிமீட்டர் 3. மீட்டர்

17. நீரின் பண்புகளில் ஒன்று?
   1. பரவிச் செல்லாது
   2. நிறமுள்ளது
   3. பாத்திரத்தின் வடிவத்தைப்பெறும்

18. நீரைச் சூடாக்கும் போது நடைபெறாதது?
   1. நீர் சூடாகாது
   2. நீர் படிப்படியாகக் குறையும்
   3. நீர் ஆவியாகும்.

19. நீராவியில் அவித்து உண்ணும் உணவுகள்?
   1. அப்பம், சோறு, பிட்டு
   2. பிட்டு இடியப்பம், இட்லி
   3. சோறு, பாற்சோறு, இட்லி

20. பனிக்கட்டி ஒன்றை நீர் உள்ள பாத்திரமொன்றில் இடும்போது நிகழாதது?
   1. பனிக்கட்டி மிதக்கும் 2. பனிக்கட்டி உருகும் 3. பனிக்கட்டி தாழும்

21. அருகே காட்டப்பட்ட படத்தில் இருக்கும் கருவி ?



1. நீர்ச்சக்கரம்
2. பற்சில்லு
3. திசைகாட்டி

22. தூய நீரின் பண்புகள் ?
1. சுவையற்றது, நிறமற்றது, மணமற்றது.
2. சுவையானது, நிறமானது, மணமில்லை.
3. சுவையற்றது, நிறமுள்ளது, மணமுள்ளது.

23. நீரின் பயன்களில் ஒன்று ?
1. மின்சார உற்பத்திக்கு 2. மரத்தூளை சீராக்க 3. ரெஜிபோமை கரைப்பதற்கு

24. அருகே உள்ள சாடியில் ஒவ்வொரு துளையினூடாகவும் வேறுபட்ட வேகத்தில் நீர் வெளியேறுகின்றது இதற்கான காரணம் ?



1. பாத்திரம் சிறியதாக இருப்பதால்
2. நீரின் அமுக்க வேறுபாட்டினால்
3. பாத்திரத்தில் போதியளவு நீர் இல்லாமையால்

25. பனிக்கட்டி ஒன்றை உருகாமல் செய்வதற்கு செய்ய வேண்டியது?
1. பனிக்கட்டியை நீரில் இடுதல்.
2. பனிக்கட்டியை ரெஜிபோம் பெட்டியில் இட்டு மூடி வைத்தல்.
3. பனிக்கட்டியை எண்ணெய் நிரப்பிய பாத்திரத்தில் இடுதல்.

26. அதிகளவு நன்னீர் தேவைப்படும் சந்தர்ப்பம்?
1. விவசாய நடவடிக்கை 2. மண்ணை அகழ்தல் 3. படிக்கட்டு அமைப்பதற்கு

27. பனிக்கட்டிகளை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் ஒன்று ,
1. மீனை பழுதடையாது பாதுகாத்தல்
2. காற்று வீசுவதற்கு
3. மண்ணை பாதுகாப்பதற்கு

28. படத்தில் காட்டப்பட்ட பரிசோதனையின் போது கடதாசி கீழே விழாமைக்கான காரணம் ?



1. நீரின் அமுக்கம்
2. நீரின் அடர்த்தி
3. நீரின் திரவநிலை

29. நீர் மாசடையும் வழிமுறைகள் அல்லாதது? ,
1. இரசாயன வாயுக்கள் நீருடன் கலத்தல்.
2. தொழிற்சாலைக் கழிவுகள் நீருடன் சேருதல்.
3. கிணற்றடிக்கு அருகில் மரங்கள் நாட்டாது விடல்.

30. அசுத்தமான நீரினால் பரவும் நோய்கள்?
    1. இரைப்பையழற்சி, கண்டமாலை, மாலைக்கண்
    2. வயிற்றோட்டம், ஈரழழற்சி, செங்கண்மாரி
    3. மஞ்சட்காமாலை, கழிச்சல்நோய், குவாசியக்கோர்

31. சிவப்பு நிறமும் மஞ்சள் நிறமும் சேரும்போது தோன்றும் நிறம் யாது?
    1. ஊதா 2. பச்சை 3. செம்மஞ்சள்

32. உலக நன்னீர் தினம் கொண்டாடப்படுவது
    1. மார்ச் 22 2. ஏப்ரல் 23 3. மார்ச் 23

33. நீரைச் சுத்திகரிக்கப் பயன்படுத்தும் வித்து
    1. மாங்கொட்டை 2. தேக்கங்கொட்டை 3. பலாக்கொட்டை

34. பனிக்கட்டி விரைவாகக் கரைவது?
    1. குளிர்நீரில் 2. சுடுநீரில் 3. சாதாரண நீரில்

35. நீரின் மேல் மிதக்கும் திரவங்கள்?
    1. பால், மண்ணெண்ணெய், வினாகிரி ,
    2. பெற்றோல், மண்ணெண்ணெய், தேங்காயெண்ணெய்
    3. தேன், பெற்றோல், வினாகிரி

36. நீர் விரயமாகும் சந்தர்ப்பங்கள்?
    1. குழாய்களில் வெடிப்புகள் காணப்படல்
    2. நீருடன் கழிவுகள் சேராதுவிடல்
    3. நீரை அளவாகப் பெற்றுக்கொள்ளல்

37. நீர் மாசடையும் வழி முறையில் அடங்காதது?
    1. குப்பை கூளங்களை கொட்டுதல்
    2. தொழிற்சாலை கழிவுகள் நீரில் கலத்தல்
    3. நீரை வடிகட்டுதல்

38. பனிக்கட்டியை நீண்டநேரம் கரையாமல் பாதுகாக்க இடப்படவேண்டியது?
    1. சாம்பல் 2. மரத்தூள் 3. மண்

39. எந்நீரினுள் பனிக்கட்டியை இடும்போது விரைவாக உருகும்
    1. குளிர்நீர் 2. சுடுநீர் 3. மழைநீர்

40. நீரில் எத்தூளைஇடும்போது ஊதா நிறமாக மாறும்?
    1. பொட்டாசிய தூள் 2. கொண்டிஸ் தூள் 3. கல் உப்பு

41. "வுளு" செய்வதற்காக நீரைப் பயன்படுத்துபவர்கள்?
    1. இந்துக்கள் 2. சிங்களவர் 3. முஸ்லிம்கள்

42. சுத்தமான நீரில் முட்டையை விட்டால் யாது நிகழும்?
    1. மிதக்கும் 2. தாளும் 3. உடையும்

43. அசுத்தமான நீரை குடிப்பதால் உடலில் பாதிப்படையும் பகுதி?
    1. நுரையீரல் 2. கல்லீரல் 3. இதயம்

44. பின்வருவனவற்றுள் கலப்பு வர்ணமாக அமைவது?
1. சிவப்பு 2. பச்சை 3. நீலம்


45. எப்பொருளை நீரில் கரைத்து, பின்னர் நீரை ஆவியாக்கி, அதன் மூலம் பொருளை மீண்டும் பெற முடியும்?
1. சவர்க்காரம் 2. உப்பு 3. பால்மா

46. நீரில் இருக்கக்கூடிய ஓர் இயல்பாக அமைந்தது?
1. கொண்டிஸ் தூளினால் நிறமூட்டல்.
2. வெப்பமாகும்போது நீராவி வெளியேறுதல்.
3. குளிர்த்தும்போது பனிக்கட்டியாக மாறுதல்.

47. வானவில்லில் உள்ள ஏழு நிறங்களாக அமைவது?
1. சிவப்பு, நீலம், ஊதா, மஞ்சள், பச்சை, செம்மஞ்சள், கறுப்பு
2. ஊதா, சிவப்பு, கருநீலம், மஞ்சள், பச்சை, நீலம், செம்மஞ்சள்
3. சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள், பச்சை, நீலம், கறுப்பு, வெள்ளை

48. நீர் குடத்தில் மோதிரத்தை மணமகனும் மணமகளும் தேடி எடுக்கும் சடங்கு செய்பவர்கள்?
1. தமிழர் 2. சிங்களவர் 3. முஸ்லிம்

49. படத்தில் காட்டப்பட்ட பரிசோதனையின் போது தோன்றும் நிறம் எவ்வாறு அழைக்கப்படும்?
1. வர்ண நிறங்கள்
2. வானவில் நிறங்கள்
3. விம்ப நிறங்கள்



50. செம்மஞ்சள் நிறத்தை பெற சேர்க்க வேண்டிய நிறங்கள்?
1. சிவப்பு, மஞ்சள் 2. சிவப்பு, நீலம் 3. கறுப்பு, மஞ்சள்

51. சூழல்நேயத்திரவம் என அழைக்கப்படுவது?
1. பெற்றோல் 2. மண்ணெண்ணெய் 3. வேப்பெண்ணை

52. நீரில் கரைந்து நீரின் நிறத்தை மாற்றாத பொருள்?
1. பால் 2. பனிக்கட்டி 3. மஞ்சள்தூள்

53. நீரின்மையால் ஏற்படும் பாதிப்புக்கள்?
1. குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படல்
2. வறட்சி ஏற்படல்
3. மேற்கூறிய யாவும்

54. நீரின் உறைநிலை எவ்வாறு அழைக்கப்படும்?
1. நீராவி 2. பனிக்கட்டி 3. திரவம்

55. நீருடன் நன்றாகக் கரையக் கூடிய திரவம்?
1. வினாகிரி 2. பெற்றோல் 3. தேங்காய்எண்ணெய்

56. பின்வருவனவற்றில் நீரில் விடும்போது மிதக்க கூடியது?
1. பனிக்கட்டி 2. கண்ணாடித் துண்டு 3. குண்டூசி

57. நீர் பாத்திரம் ஒன்றில் விடும்போது பாத்திரத்தின் அடித்தளம் வரை அமரக்கூடிய பொருள்?
1. காய்ந்த இலை 2. மெல்லிய மரத்துண்டு 3. சிறுகல்

58. பருகுவதற்கு ஆரோக்கியமான நீர்?
1. வடிகட்டிய நீர்
2. கொதித்து ஆறியநீர்
3. கொதித்து ஆறியபின் வடிகட்டியநீர்

59. பாத்திரம் ஒன்றினுள் பனிக்கட்டிகளை விட்டு வைக்கும்போது நிகழக்கூடியது அல்லாதது?
1. குவளையில் உள்ள நீர் குளிர்ச்சி அடையும்
2. குவளையின் வெளிப்புறத்தில் நீர்த்துளிகள் தோன்றும்
3. குவளையில் உள்ளநீர் மிதக்கும்

60. ஓடும் நீரின் வேகத்தை கட்டுப்படுத்துவதற்காக செய்யக்கூடிய ஒன்று?
1. புற்களை வளர்த்தல்
2. அணைக்கட்டுகளில் துளையிடுதல்
3. வடிகால்களை அகற்றுதல்

61. பின்வருவனவற்றுள் நீரோடு சம்பந்தப்பட்ட சம்பிரதாயமுறை அல்லாதது?
1. கிணற்றுடன் கொடுக்கல் வாங்கல் செய்தல்
2. இறந்த உடலைக் குளிப்பாட்டல்
3. தினம்தோறும் முகத்தை கழுவுதல்

62. நீர் சூழ் அலைகள் மூலம் பெறப்படும் பிரதான பயன்?
1. நிலங்களுக்கு நீர் வழங்குதல்
2. மின்சாரம் உற்பத்தி செய்தல்
3. நீரைச் சுத்திகரித்து

63. நீராவி மூலம்பெற்றுக்கொள்ளக்கூடிய பயனாக அமையாதது?
1. பிட்டு அவித்தல் 2. அப்பம் சமைத்தல் 3. இடியப்பம் அவித்தல்

64. தமது இல்லத்திற்கு நீர்க்குழாய் வசதியினைப் பெற்றுக்கொள்ள நாம் செல்ல வேண்டிய இடம்?
1. நீர்ப்பாசன திணைக்களம்
2. நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
3. பிரதேச செயலகம்

65. பின்வருவனவற்றில் சிங்களவர்களது நீருடன் இணைந்த கலாச்சாரம்?
1. நீர் பாத்திரங்களை கொடுத்து வரவேற்றல்
2. மணமகனை கால்களை கழுவி வரவேற்றல்
3. நீர் நிரம்பிய குடத்தை முன்வைத்தல்

66. ஆழமான கிணற்றில் இருந்து நீரை எடுப்பதற்கு பயன்படுத்தும் பொருள்?
1. கப்பி 2. நீர் சில்லு 3. பற்சில்லு

67. இளநீரை பதப்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளும் ஒன்று?
1. வினாகிரி 2. தயிர் 3. தண்ணீர்

68. நீரில் அமிழும் திரவங்களில் ஒன்று?
1. வினாகிரி 2. மண்ணெண்ணெய் 3. தேங்காய் எண்ணெய்

69. குறைந்த அளவு நீரினை பருகுவதனால் ஏற்படும் ஒரு பாதிப்பு?
1. வாய்,தொண்டை வரண்டுபோதல்
2. சிறுநீர் கழித்தல்
3. உடல் சுறுசுறுப்பாக இருத்தல்

70. நீர்வடிகட்டியில் கரிக்கட்டி இடப்படுவதன் நோக்கம்?
1. கரிக்கட்டியை இலகுவாக பெறலாம்.
2. அசுத்தமான வாயுக்களை உறிஞ்சும்.
3. நீரில் மிதப்பதற்கு.


71. சித்திரை புது வருட காலத்தில் மருத்துநீர் வைத்து நீராடுபவர்கள் ?
1. பௌத்தர்கள் 2. இஸ்லாமியர்கள் 3. இந்துக்கள்

72. நீரை சுத்திகரிப்பதற்காக பயன்படுத்தப்படும் இரசாயனப்பொருள்?
1. ஓடிக்கலோன் 2. பெற்றோல் 3. குளோரின்

73. நீருடன் தொடர்புடைய கைத்தொழில்?
1. நன்னீர் இறால் வளர்ப்பு
2. தும்புத்தொழிற்சாலை
3. மேற்கூறிய யாவும்

74. பிராணிகளின் தாக்கத்தில் இருந்து பயிர்களை பாதுகாப்பதற்கு விவசாயிகள் பயன்படுத்தும் ஒரு உபகரணம்?
1. வனைச்சில்லு 2. நீர்ப்பிசாசு 3. நீர்ச்சுழலி

75. படத்தில் காட்டப்பட்ட பரிசோதனையின் போது பொருளின் நிறை வேறுபடுவதற்கான பிரதான காரணம்?
1. நீரின் திரவத்தன்மை
2. நீரின் மேலுதைப்பு
3. நீரின் அமுக்கம்



76. பின்வரும் கூற்றுக்களில் நீரை பற்றிய தவறான கூற்று?
1. நீருக்கு நிச்சயமான வடிவம் இல்லை.
2. வெப்பநிலை அதிகரிக்கும்போது சீனி நீரில் கரைவது கடினமாகும்.
3. கலக்கும்போது சீனி நீரில் எளிதாகக் கரையும்

77. நீர் உள்ள பாத்திரம் ஒன்றினுள் அமுக்கம் அதிகமாக இருப்பது ?
1. அடிப்பகுதியில் 2. மேற்பகுதியில் 3. நடுப்பகுதியில்

78. உப்பு நீர் உள்ள பாத்திரத்தில் முட்டையை இடும் போது நிகழ்வது?
1. நல்ல முட்டை மிதக்கும்.
2. நல்ல முட்டை அமிழும்.
3. நீரின் இடையே நீந்தியபடி காணப்படும்.

79. நல்ல விதை ஒன்றின் இயல்பு?
    1. நீரினுள் நீந்தியபடி காணப்படும்.
    2. நீரில் அமிழ்ந்து காணப்படும்.
    3. இந்த மாற்றமும் நிகழாது.

80. மாசடைந்த நீரினால் சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் தீய விளைவு அல்லாதது?
    1. துர்நாற்றம் வீசுதல்
    2. தோல்நோய் ஏற்படுதல்
    3. நுளம்புகள் பெருகுதல்

81. எலியின் சிறுநீர் கலந்த நீரினால் ஏற்படும் நோய்?
    1. தோல் புற்றுநோய் 2. எலிக் காய்ச்சல் 3. டெங்கு நோய்

82. நீர் மாசடைவதற்கு காரணமாக அமையாதது?
    1. விலங்குகளின் கழிவு நீருடன் சேருதல்.
    2. தொழிற்சாலை கழிவுகள் நீருடன் கலத்தல்
    3. நிலத்தில் உள்ள கனியுப்புக்கள் நீருடன் கலத்தல்

83. மத்திய மாகாணத்தில் வசிக்கும் மக்களுக்கு சிறுநீரக செயலிழப்பு ஏற்படுவதற்கு காரணமாக அமைந்த நீருடன் கலக்கும் பொருள்?
    1. இரசாயன வளமாக்கிகள்
    2. குளோறின்
    3. கல்சியம் கார்பனேட்

84. இறைவனைத் தொழுவதற்கு முன் தம்மை சுத்தப்படுத்த நீரினை பயன்படுத்தும் சமயத்தவர்?
    1. பௌத்தம் 2. சிங்களவர் 3. இஸ்லாமியர்

85. அசுத்தமான நீரில் முட்டையிட்டு இனப்பெருகும் நுளம்பு எது?
    1. மலேரியா நுளம்பு 2. டெங்கு நுளம்பு 3. ஆனைக்கால் நுளம்பு

86. இலங்கையில் உள்ள மிகப்பெரிய நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம்?
    1. போவத்தென்ன 2. அம்பேவெல 3. அம்பத்தவே

87. நீர் வடிகட்டி ஒன்றை அமைக்க பயன்படுத்தும் ஒரு வடி கட்டும் படையாக அமையாதது?
    1. மணல் படை 2. கரிப்படை 3. களிப்படை

88. நீர் பிசாசு என்பது?
    1. கதை ஒன்றில் இடம் பெற்றுள்ள மாயக் கதாபாத்திரம்
    2. நீர்நிலைகளுக்கு அருகில் வாழுகின்ற ஒரு பிராணி
    3. பிராணிகளிடமிருந்து பயிர்களை பாதுகாப்பதற்கான ஓர் அமைப்பு

89. நீர் வடிகட்டியை அமைக்கும் வடிகட்டி ஒன்றில் விடவேண்டிய படைகளின் ஒழுங்குமுறை?
    1. பஞ்சுத்திரள் களிப்படை பரல்படை,
    2. பஞ்சுத்திரள் பரல்படை பெருமணல் மென்மணல்

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

3. பஞ்சுத்திரள், மென்மணல், பெருமணல், பரல்படை

90. பனிக்கட்டி ஒன்றை கையில் வைத்திருக்கும்போது உணரக்கூடியது?
1. கையில் குளிர்மை ஏற்படுவதுடன் இனிப்பாகவும் இருக்கும்
2. கையில் எரிவு ஏற்படுவதுடன் வறண்டு போகும்
3. கையில் சூடாக இருப்பதுடன் வலி ஏற்படும்

91. பாரிய அணைக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ள முறை பற்றி சரியான கூற்று?
1. அணைக்கட்டின் அடிப்பகுதி அகலம் கூடவாகவும் மேலே செல்லச்செல்ல அகலம் குறைந்ததாகவும் காணப்படும்
2. அணைக்கட்டின் மேற்பகுதி அகலமாகவும் கீழே செல்லச் செல்லக் குறைந்தும் காணப்படும்
3. அணைக்கட்டில் அனைத்து பகுதிகளும் அழமானதாக காணப்படும்

92. பாரிய நீர் தேக்கங்களில் நீரின் அமுக்கம் அதிகமாக காணப்படும் பகுதி?
1. அடிப்பகுதி
2. மத்திய பகுதி
3. மேற்பகுதி

www.ikedu.lk
புலமை விக்குகள்